www.tamilarangam.net

அன்பளிப்பு ரூ. 1

# உறுமல்

நாள்: 01-04-87 தமிழீழச் செய்திகள் வெளியீடு: 20

### விடுதலைப் புலிகளின் மின்னல்வேகத் தாக்குதலில்,

# சிங்கள இராணுவ முகாம் தகர்ப்பு!
# 8 இராணுவத்தினர் சிறைபிடிப்பு!!

## உலகப் போராட்ட வரலாற்றில் இடம்பெற்றிராத சாதனை

**- யாழ் நாளேடுகள் பாராட்டு.**

யாழ்கோட்டை இராணுவ முகாமுக்குஅருகே சிங்கள இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த போலீஸ் நிலைய விடுதி மற்றும் தொலைத் தொடர்பு நிலையம் ஆகிய முகாம்களை தளபதி கிட்டு, ராதா ஆகியோர் தலைமையில் ஒரே இரவில் தாக்கி 20 இராணுவத்தினரைக்கொன்று, 8 இராணுவத்தினரைக் கைது செய்த தமிழீழ விடுதலைப் புலிகள், அங்கிருந்து ஏராளமான ஆயுதங்களையும் கைப்பற்றினர். இத்தாக்குதலை, யாழ் நகரிலிருந்து வெளிவரும் நாளிதழ்கள் "உலக வரலாற்றில் இடம்பெற்றிராத வீரச்செயல்" எனப் பாராட்டி செய்திகளை வெளியிட்டுள்ள துடன் தலையங்கங்களும் தீட்டியுள்ளன.



துரை



ராஜ் மோகன்

யாழ் மாவட்டத் தளபதி கிட்டு, மன்னார் மாவட்டத்தளபதி ராதா ஆகியோரின் தலைமையில், யாழ் கோட்டை இராணுவ முகாமுக்கு அருகே உள்ள யாழ்தொலைத்தொடர்பு நிலையம் மற்றும் போலிஸ் நிலைய விடுதி இராணுவ முகாம்கள் மீது 23-3-87 அன்று அதிகாலை தமிழீழ விடுதலைப் புலிகள் மின்னல் வேகத் தாக்குதலை, மேற்கொண்டனர். விடுதலைப்புலிகளின் திடீர் தாக்குதலினால் நிலை குலைந்த சிங்கள இராணுவத்தினரில் பலர் ஆயுதங் களையும் போட்டுவிட்டு ஓடி ஒளிந்தனர். அந்த ஆயுதங்களைக் கைப்பற்றிய விடுதலைப்புலிகள் அந்த ஆயுதங்களையும் பயன்படுத்தி எதிர்த்து நின்ற சிங்கள இராணுவத்தினருடன் கடும் சமரில் இறங் கினர்.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் செய்தி வெளியீட்டுப் பிரிவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்களோடு புலிகள்

## மக்கள் ஆதரவுடன் சிறப்புற இயங்கும் புலிகளின் நீதிமன்றம்

தொல்புரம் பிரதேச தமிழ்ஈழ கிராமிய நீதி மன்றத்தில் இதுவரை 300க்கும் மேற்பட்ட முறைப் பாடுகள் விசாரணைக்கு எடுத்து, தீர்ப்புகள் வழங்கப் பட்டுள்ளன. குற்றவியல், குடியியல் வழக்குகள் உரிமை சம்பந்தமான விசாரணைகள் அனைத்தும் சிறப்பாக விசாரிக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் ''மனித உரிமைகள் மீறல் மனு'' ஒன்றும் மேற்படி நீதிமன்றத்தில் கூட்டுறவுத்துறை சார்ந்த வழக்காகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மையும், மேற்படி மன்றின் தரம்பற்றி உணரக்கூடிய தாக இருக்கிறது.

பல வருடங்களுக்கு முன்னர் நடந்த கொலை வழக்குகள், குற்றவியல் வழக்குகள் இன்னும் பலவும் உரிய முறையில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு நீதி யான முறையில் தீர்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்ற மையைப் பலரும் பாராட்டி வருகின்றனர். விசாரணை தினங்களில் பெருந்திரளான பொது மக்கள் பார்வையாளராக இங்கு குழுமி இருக் கின்றனர்.

## பணத்தை அபகரித்த பெண்ணிற்கு எச்சரிக்கை!

மகளின் திருமணத்திற்காக நகை செய்வதற்கு ரூபாய் நாற்பதினாயிரத்துடன் அராலித்துறைக் கடல் மார்க்கமாகப் படகில் யாழ்ப்பாணம் வந்த ஒருவர் நடுக்கடலில் படகு மூழ்கியதால் ரூபாயைத் தவற விட்டுவிட்டார். இந்நெருக்கடியில் மற்றொரு பெண் பணத்தை அபகரித்துக் கொண்டார்.



(விடுதலைப் புலிகளால் யாழ் குருநகரில் அமைக்கப்பட்ட தேவதாஸ் சிறுவர் பூங்கா)

சம்பந்தப்பட்ட பெண்மீது சந்தேகம் கொண்ட விடுதலைப்புலி இயக்க வீரர் ஒருவர் அப்பெண்ணை விசாரித்தபோது விசயம் அம்பலத்துக்கு வந்தது. பணம் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் பணம் அபகரித்தவர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

## திருட்டுப் போன பாடசாலைத் தளவாடங்களை புலிகள் மீட்டனர்

அராலிவடக்கு அமி. தமிழ்க்கலவன் பாடசாலை யின் மேசை, நாற்காலிகளைத் திருடிய நால்வரை விடுதலைப் புலிகள் கண்டுபிடித்து தண்டனை வழங்கினர். இந்த நால்வரையும் விசாரணைக் குட்படுத்திய விடுதலைப்புலிகள் பாடசாலையில் அண்மைகாலமாகக் காணாமல்போன பொருட் களைக் கைப்பற்றி பாடசாலையில் ஒப்படைத்தனர். திருடர்கள் நால்வருக்கும் கடுமையான தண்டனை வழங்கப்பட்டு எச்சரிக்கையும் செய்யப்பட்டது.

## பனம் கள்ளிலிருந்து எரிபொருள் தயாரிக்க புலிகள் தீவிர முயற்சி!

அரசாங்கத்தின் எரிபொருள் தடையிலிருந்து பொதுமக்களைக் காக்கும் முயற்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கம் பனங்கள்ளிலிருந்து எரிபொருளைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளில் தீவிர மாக ஈடுபட்டுள்ளது. இந்த நவீன எரிபொருளைத் தயாரிக்கும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருவதோடு, எரிபொருள் தடையைச் சமாளிக்கும் முயற்சிகளிலும் விடுதலைப் புலிகளின் இயக்கம் ஈடுபட்டு வருகின்றது.

## விமானத் தாக்குதலிலிருந்து தற்காத்துக்கொள்ள பதுங்கு குழிகளை அமைக்குமாறு மக்களுக்குப் புலிகள் மீண்டும் கோரிக்கை!

விமானக் குண்டுத் தாக்குதல்களிலிருந்து உயிர் தப்ப பதுங்கு குழிகளை அமைக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்குடா நாட்டு மக்களை மீண்டும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

குடா நாட்டின் மேலாக அடிக்கடி விமானங்கள் 'வேவு' பார்ப்பதைச் சுட்டிக் காட்டியுள்ள புலிகள் இயக்கத்தினர், கிராமங்கள்தோறும் உள்ள தம் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களின் ஆலோசனைப்படி 'பதுங்குகுழிகளை' அமைக்குமாறு குடா நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போர்முனையில் புலிகள்

## 11-3-87

யாழ்ப்பாண மாவட்டத்தில் நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி அடாவடித்தனமான அட்டூழியங்கள் புரியவும், எமது மக்களுக்கு உயிச்சேதம், பொருட்சேதம் ஏற்படுத்தவும் அரச கூலிப்படையினர் நேற்றும், இன்றும் வெளியே வந்தனர். இவர்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் கெரில்லாப்படை அணிகள், இராணுவம் வெளியே வரலாம் என, நினைத்த இடங்களிலெல்லாம் தடுத்து நிறுத்திப் போரிட்டனர். இவ்வரச பயங்கரவாதிகளுக்கு ஆதரவாகக் குண்டுவீச்சு விமானங்கள் மக்கள் குடியிருப்புக்கள் மீது குண்டுமாரி பொழிந்ததுடன், கெலிகாப்டர்கள் எம்மக்கள் பகுதிமீது துப்பாக்கிக் குண்டுகளை விதைத்தன. இராணுவத்தனரின் மிருகத்தனமான, மனிதாபிமானமற்ற இந்நடவடிக்கைகளிலிருந்து காப்பாற்ற விமான எதிர்ப்புப் பீரங்கிகள், மோட்டார்கள், கனரக ஆயுதங்கள், மற்றும் நவீனரக ஆயுதங்கள் கொண்டு, மிக மூர்க்கத்தனமான முறையில், விமானங்களுக்கும் தரைப்படையினருக்கும் எதிராக எம்மவர்கள் தாக்குதலை மேற்கொண்டனர். புலிகளின் அதிரடிக்கு ஈடுகொடுக்க முடியாத சிங்கள அரசின் பட்டாளங்கள் புறமுதுகிட்டன. எம்மவர்களின் துப்பாக்கிக் குண்டுகள் உயிர் குடித்த வெற்றுடல்களையும், காயம்பட்டவர்களையும் கெலிகாப்டரில் பலமுறை ஏற்றிய இராணுவத்தினர் முகாமுக்குக் கொண்டு சென்றனர். பின்னர் பலத்த இழப்புக்களுடன் முகாமுக்குள் பதுங்கிய இராணுவத்தினர் அங்கிருந்தவண்ணம் செல் தாக்குதலை மேற்கொண்டனர். இதற்கும் எம்மவர்கள் பதில் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

## 14-3-87

காங்கேசன்துறையிலிருந்து, உணவுப் பொருட்களுடன் தமக்குத் தேவையான அத்தியாவசியப் பிறசாதனங்களுடனும், பலாலி நோக்கி வந்துகொண்டிருந்த சிறீலங்கா இராணுவத்தினர்மீது, தமிழீழ விடுதலைப் புலிகளால் ஏற்கனவே ஒழுங்கமைக்கப்பட்டிருந்த, அதிசக்திவாய்ந்த கண்ணிவெடி இயக்கப்பட்டது. இதில் அகப்பட்ட மூன்று அரச படையினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டதுடன், அவர்களில் பலரது உடல்கள் சிதறு துண்டுகளாகச் சிதைந்தன. அதுமட்டுமல்லாமல் தம்முடன் எடுத்துவரப்பட்ட உணவு மற்றும் பிற சாதனங்கள் பாவனைக்குட்படுத்த முடியாதவாறு சேதமடைந்தது. பின்னர் புலிகள் பாதுகாப்பாகத் தளம் வந்தடைந்தனர்.

## 15-3-87

பலாலியில் கட்டுவன் பகுதியிலிருந்து, இன்று இரவு பதினொரு மணியளவில், முகாமைவிட்டு வெளியேவர எத்தனித்த நூற்றுக்கு மேற்பட்ட



(விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு 8 இராணுவத்தினர் உயிருடன் பிடிக்கப்பட்ட யாழ் தொலைத் தொடர்பு நிலைய இராணுவ முகாம் கட்டிடம். கட்டிடத்துக்கு முன்னால் தளபதி கிட்டு).

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இராணுவத்தினரை, புலிகளின் கெரில்லா அணி, தடுத்து நிறுத்தி அரைமணி நேரமாகக் கடுமை யான தாக்குதலை மேற்கொண்டது. இதனால் மக்கள் அதிகம் வாழும் பகுதியில் முன்னேற முடியாத இராணுவக் கூட்டம், இழப்புக்களால் ஏற்பட்ட அதிர்ச்சியில், தமது முகாமை நோக்கிப் பின்வாங்கினர். புலிகளின் படையணி, பாதுகாப் பாக அவர்களின் தளத்துக்கு மீண்டனர்.

## 16-3-87

கிழக்கு மாகாணத்தில், திருகோணமலையில் உள்ள தம்பலகாமம் என்ற இடத்தில் அமைந்துள்ள, தமிழீழ விடுதலைப் புலிகளின் படைப்பிரிவொன்றின் முகாமைச் சுற்றிவளைத்து அழிக்கும் நோக்கத் துடன், சிறீலங்கா அரசின் விசேஷபடைப் பிரிவின ரான கறுப்புச்சட்டை இராணுவத்தினர் இரு நூற்றுக்கும் மேற்பட்டோரால் சுற்றிவளைக்கப் பட்டது. கூடியளவு அவதானத்துடன் செயல்படும் புலிகளின் கெரில்லா அணி, இச்செயலை அவ தானித்து, அதிவேக அதிரடி நடவடிக்கையை மேற் கொண்டது. எமது நிகரற்ற வீரர்களின் துப்பாக்கி கள் பொழிந்த குண்டுகள், அவ்விடத்திலேயே ஆறு கறுப்புச்சட்டை இராணுவத்தினரின் உயிரைப் பறித்தது. மேலும் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர். இவர்களில் உயிராபத்தான நிலையிலுள்ள அரச படையினர் கொழும்பு, அனுராதபுரம் மருத்துவமனைகளுக்கும் சிறு காயத்திற்குள்ளானவர்கள் திருகோணமலை யில் அமைந்திருக்கும் கடற்படையினரின் வைத்திய சாலைக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இதன் போது அரச படைக்கு ஆதரவாக தாக்குதலை நடாத்திய ஹெலிகாப்டர் ஒன்று புலிகளின் நவீனரக விமான எதிர்ப்புப் பீரங்கித் தாக்குதலால் சேத மடைந்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் படையணி, தம்மையும் தமது தளத்தையும் எவ்வித இழப்புக்களுமின்றிப் பாதுகாத்துக் கொண்டனர்.

இன்று முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சுதந் திரபுரம், வள்ளிபுரம் ஆகிய கிராமங்கள் மீது தாக்கு தல் நடாத்தும் நோக்கத்துடன் 5 ஹெலிகாப்டர் களின் உதவியுடன் அரசபடையினர் இப்பகுதிகளில் கொண்டு வந்து இறக்கப்பட்டனர். எமது ஆய்வா ளர்களினால் இத்தகவல் ஊர்ஜிதப்படுத்தப்பட்ட வுடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் கெரில்லாப் படை அணியொன்று இவர்களைச் சுற்றிவளைத்துத் தாக்குதலை மேற்கொண்டது. எமது படையினரின் மிதமிஞ்சிய தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திண்டாடிய இராணுவத்தினருக்குப் பக்கபலமாக, குண்டுவீச்சு விமானங்கள் குண்டுவீச்சினை மேற் கொண்டன. இவற்றின் பின் பாரிய அளவிலான இழப்புகளுடன் இராணுவத்தினர் தமது முகாம் களுக்கு சென்றுவிட்டனர்.

இவ்வாறு தமது முயற்சியில் தோல்வியுற்ற சிங்க ளப்படையினர், காலையும் மாலையும் யாழ் குடா நாட்டின் பகுதிகளான நாவற்குழி, தெல்லிப்பளை போன்ற இடங்களை ஹெலிகாப்டரின் உதவியுடன் ஏவுகணைத் தாக்குதலுக்கு உட்படுத்தினர். இச் சம்ப வம் நடந்த இடத்தில் எதிரியின் அறைகூவலுக்குப் பதிலளிக்கும் வகையில், நவீன ரக ஆயுதங்களைக் கொண்டு தொடர்ச்சியான தாக்குதலை மேற்கொண் டனர். எம்மவரின் அதிரடி நடவடிக்கையில் பீதி அடைந்த சிறீலங்கா அரசின் ஹெலிகாப்டர்கள், மேலும் உயரப்பறந்து தமது முகாம்களில் உள்ள இறங்குதளம் நோக்கி ஓடிமறைந்தன.

மன்னாரில் எமது யுத்த முறைப்படி, கைவிட்டுச் செல்லவேண்டியிருந்த பாசறை ஒன்றுக்குள், எதிரி நுழைந்தால் சிதறடிக்கும் நோக்கத்துடன் பொறிக் கண்ணிவெடிகள் எமது கெரில்லாக்களினால் புதைத்து வைக்கப்பட்டிருந்தன. எம்மவர்களினால் திட்டமிடப்பட்டு ஏற்கெனவே கைவிடப்பட்டிருந்த முகாமுக்குள் நுழைந்த சிங்களப்படையினரில் இரண்டு அரச கூலிப்படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். அதுமட்டுமல்ல, சுற்றுப்புறம் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்த பெரும்பாலான இராணுவத்தினர் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

## 17-3-87

நாவற்குழி இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் ஏற்பட்ட நேரடி மோதலில் பெருந்தொகையான இராணுவத்தினர் பலத்த காயங்களுக்குள்ளானார் கள். பலமணிநேர சண்டைக்குப்பின் புலிகளின்படை வெற்றியுடன் திரும்பியது. தமிழீழ விடுதலைப் புலி களின் 2வது லெப்டினன்ட் கேதீஸ்வரனும், ஜீவாவும் இச்சமரில் வீரமரணமடைந்தனர். அத்துடன் பலாலி, தோலகட்டியில் முகாமிட்டிருக்கும் இராணு வத்தினர் அச்சுவேலியை நோக்கி, அச்சுவேலி - வசாவிளான் வீதி வழியாக முன்னேறிக் கொண் டிருக்கையில் எமது வீரர்களால் தடுத்து நிறுத்தப் பட்டு, தொடர்ந்து இரண்டு மணி நேரம் சண்டை நடந்தது. இதனால் அச்சுவேலி செல்லும் எண்ணத் தைக் கைவிட்டு பலத்த இழப்புகளுடன் அரச படை யினர் தமது முகாமுக்கு பின்வாங்கினர். இதில் எம்மவர்களுக்கு இழப்புகள் ஏற்படவில்லை.

## 18-3-87

கிளிநொச்சியிலிருந்து கொக்காவில் நோக்கி சென்று கொண்டிருந்த சிங்கள அரசின் இராணுவ வாகனத் தொடருக்கு, முறிகண்டி என்னும் இடத் தில் வைத்து, புலிகளால் கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலுக்கு இலக் கான கவச வாகனம் ஒன்று முற்றாகச் சேதமடைந் துள்ளது. இதில் வந்தவர்களில் சிலர் இறந்தும் ஏனை யோர் காயமடைந்தும் உள்ளனர். **''கிளிநொச்சி தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக சமீபத்தில் அத்துலத்முதலியால் கூறப்பட்டிருந்தது''.** அதே கிளிநொச்சியில் எம்மவர்கள் வெற்றிகரமான தாக்கு தலை நிறைவேற்றியபின் பாதுகாப்பாக எவ்வித இழப்புமின்றி தமது தளம் சென்று அடைந்தனர்.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு, மட்டக் களப்பு மாவட்டத்திலுள்ள கிரான் எனும் இடத் தைச் சுற்றியுள்ள இராணுவ முகாம்களுக்கு அரச கூலிப் படையினர் ஹெலிகாப்டர்கள் மூலம் கொண்டு வந்து இறக்கப்பட்டிருந்தனர். இவர்கள் நேற்று, புலிபாய்ந்த கல் என்ற இடத்தை நோக்கி, பொது மக்களைக் கொன்றொழிக்கும் நோக்கத்துடன் இரவோடு இரவாக முன்னேறி இருந்தனர். எதிரியின் மிருகத்தனமான இந்நடவடிக்கையில் இருந்து, எமது மக்களைப் பாதுகாக்கும் இலட்சிய வெறியுடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் படைப் பிரிவொன்று, சிங்கள இராணுவத்தினரை எதிர் கொண்டு, இடைமறித்துத் தாக்குதல் நடவடிக் கையை மேற்கொண்டது. இதைச் சிறிதும் எதிர் பார்க்காத கூலிப்படை அதிர்ச்சி அடைந்தது. எமது வீரர்களின் நவீன ரக ஆயுதங்கள் கக்கிய குண்டுகள், அவர்களிற் பலரின் உயிரைக் குடித்தது. காயமடைந்த பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. இராணுவத்தினரின் எண்ணம் ஈடேறாத நிலையில், பட்டாளத்தினரில் ஒரு பகுதியைப் பறிகொடுத்தநுடன் தமது முகாம்களை நோக்கிப் பின்வாங்கிவிட்டனர். நிறைவுடன் எமது படை பாசறை திரும்பியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தியாக தீபங்கள்



''டுமீல்''...

அந்த இரு வேங்கைகளின், தியாக ஒளியின் முன் நிற்க முடியாமல் அழுத சூரியன், மேகத்துள் மறைகின்றான்.

இராணுவத்தின் வேட்டுக்கள் நாலா பக்கமும் இருந்து வருகின்றன...அவர்களின் இரத்தக்கறை படிந்த ஆயுதங்களையும் சுமந்து கொண்டு கணேசும் அருணாவும் புதிய பாதையை நோக்கி ஓடுகிறார்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வீரமரணமடைந்தவர்கள் பட்டியலில் இரண்டாவது மூன்றாவது இடத்தைத் தமதாக்கிக் கொள்கின்றனர் சீலனும், ஆனந்தும்.

சீலன் என்ற லூக்காஸ் சார்ள்ஸ் அன்ரனி இருபத்து மூன்று வயது கூட நிரம்பாதஇளைஞன். அழகான முகம். அழகாய்ச் சிரிப்பான் அவனுடைய பேச்சிலே மழலை சொட்டும். பழகுவதிலே அவன் குழந்தை. யாவரையும் கவர்ந்திழுக்கும் வசீகரம் அவனுடையது.

ஓரத்தில் உதட்டைக் கடித்துக் கொண்டு, கண்களைச் சுருக்கிக்கொண்டு அவன் சிரிக்கும் அழகு அவனுக்கேயுரியது. அவனோடு பழகக் கிடைத்தவர்கள் அர்திஷ்டசாலிகள். தான் மட்டுமல்ல, தன்னோடு இருப்பவர்களையும் எப்போதும் சிரிக்க வைத்துக்கொண்டிருப்பான்; கூச்ச சுபாவம் உள்ளவன். ஆனால் பழக ஆரம்பித்தால் மிகவும் இனிமையாகப் பழகுவான் - அன்பு செலுத்தத் தெரிந்த இவன் அன்பைப் பிரியமாக ஏற்றுக்கொள்வான். பிரியமானவர்கள் விளையாட்டுக்காகக் கோபித்தால்கூட அதனை அவனால் தாங்கிக்கொள்ள முடியாது. போலித்தனம் அவனுக்குத் தெரியாது. ஆர்ப்பாட்டமே இல்லாதவன். ஆயுதப்படைகளுக்கு எதிரான அதிரடித் தாக்குதல் என்றால் யுத்த சன்னதனாகக் களத்தில் குதிக்கும் அவன் சாதாரணமான பொழுதுகளில் தென்றலாகத் தெரிவான். தன் ஆத்மாவை விற்கத் தெரியாத ஒரு புரட்சிக்காரன். பிழைகளைச் சுட்டிக் காட்டுவதில் நக்கீரன்.



மேஜர் கணேஸ் (சிற்றம்பலம்)
(மூதூர்)
உதிர்வு: 5-11-86

சோஷலிசத் தமிழீழத்தை நோக்கிய அவனது சிந்தனைகளும், செயற்பாடுகளும் திட்டவட்டமானவை. தலைவர் பிரபாகரனின் தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் விடுதலைப் போராட்டத்திலேயே தமிழீழம் வெல்லப்படும் என்பதில் சீலன் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தான். பிரபாகரனின் நேர்மையிலும், தூய்மையிலும், திறமையிலும், அவன் எல்லையற்ற மதிப்பு வைத்திருந்தான். தேசிய விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பணியில் ஒரு தலைமறைவு இயக்கத்தின் ஒழுங்கு, கட்டுப்பாடு என்பனவற்றைப் பேணுவதில் சீலன் காட்டிய சிரத்தை அசாதாரணமானது. அந்த வகையில் தலைவர் பிரபாகரனின் பூரண நம்பிக்கைக்கும், அன்பிற்கும், சீலன் பாத்திரமாக இருந்தான். ஒழுங்கும், கட்டுப்பாடும், இல்லாத சுயநலமிகளும், கூட இருந்தே இயக்கத்திற்குக் குழிபறித்து விட்டு ஓடிய துரோகிகளும், பிளவு வாத நடவடிக்கையில் ஈடுபட்டு, தூய்மையான இயக்கத்தை உடைக்க முயன்ற போது இயக்கத்தின் கட்டுக்கோப்பைத் தளரவிடாது காப்பதில் பிரபாகரனுடன் உறுதியாக நின்றவர்களில் சீலன் முதன்மையானவன்.

சீலன் இராணுவப் படிப்புப் படித்தவன் அல்லன்; வெளிநாடுகளில் போய்ப் பயிற்சி பெற்றவனுமல்லன். போரின் மூலமாகவே போரை அறிந்தவன். இயக்கத்தின் இராணுவப் பிரிவுக்குத் தலைமை வகித்து இவன் நடத்திய வெற்றிக்கரமான கெரில்லாத்தாக்குதல்கள், இயக்கத்திற்கு வலிமையைச் சேர்த்து விடுதலைப் போராட்டத்தையும் முன்னெடுத்துச் சென்றிருக்கிறது.

தமிழீழத்தின் போராட்ட வரலாற்றில் முதன்மை வாய்ந்த கெரில்லா வீரன் சீலன். படைத் தலைவன் என்பவன் ஆணை பிறப்பிப்பவன் மட்டுமல்லன், தானே முன்னுதாரணமாகத் திகழ்ந்து போரை வழி நடத்துபவன் என்பதற்குச் சீலனே ஒரு இலக்கணம்.

ஒரு கெரில்லாத் தாக்குதலை மேற்கொள்ளுமுன் அதற்கான தகவல்களைத் திரட்டுவதிலும், அதன் செயற்பாடு, விளைவு, தாக்கம் என்பதனை ஆராய்வதிலும் அவன் கடுமையாக உழைத்தவன். கவனப்பிசகால் எந்தவிதமான தீங்கும் ஏற்பட்டுவிடாது பார்த்துக்கொள்வதில் அவன் மிகவும் விழிப்புடன் இருப்பான. அசாத்தியமான துணிச்சலும், எதிரிகளின் பலவீனங்களை ஆராய்ந்து அதற்கேற்ப திட்டங்களை வகுக்கும் நுண்ணிய அறிவுமே குறுகிய காலத்தில் இராணுவப் பிரிவின் தலைவனாக அவனைப் பதவி வகிக்கும் நிலைக்கு உயர்த்தியது.

''ஒரு கெரில்லாப் போராளியின் வீரம் அவனது எந்திரத் துப்பாக்கியில் இல்லை. அவனது மனதில் தான் இருக்கிறது'' என்பது சீலனின் அனுபவ வாசகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவனது மனவலிமை அபாரமானது.

சாவுக்கு அவன் வாழ்க்கை ஒரு சவால்.

சீலன் திருமலையின் வீர மண்ணிலே விளைந்த நன்முத்து. சிங்கள இன வெறியாட்சியாளர்களின் நேரடியான ஒடுக்குமுறைக்குள் சிக்குண்டு கிடந்த திருகோணமலையின் நடைமுறை அனுபவங்களை அவன் கண்கூடாகக் கண்டவன். சிறீலங்காவின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் கடற்படை, விமானப்படையின் அடக்குமுறைகளும், சிங்களக் காடையர்கள் இராணுவம், போலீஸ் ஆகியோரின் அரவணைப்புடன் தமிழ் மக்களைத் துன்புறுத்தும் கொடுமைகளும் திருமலையில் ஏராளம். இந்த ஆக்கிரமிப்பிற்கு இடங்கொடுத்து வந்ததால்தான் திருமலை மண்ணையே சிங்களவர்களுக்குப் பறி கொடுக்கும் நிலை வந்தது என்று சீலன் கொதிப்பான்.

கல்லூரி நாட்களிலேயே இனவெறி பிடித்த சிங்கள ஆளும் வர்க்கத்திற்கெதிரான போராட்ட உணர்வு கொண்டவனாகச் சீலன் திகழ்ந்தான். 1978-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொண்டுவரப் பட்ட சிறீலங்கா ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் ஜே. ஆர். ஜயவர்த்தனா ஜனாதிபதியாகப் பதவியேற்கும் வைபவத்தினைத் தமிழீழ மண்ணில் அமர்க்கள மாகக் கொண்டாட அரசு மேற்கொண்ட நடவடிக் கைகளை அம்பலப்படுத்த பாடசாலை மாணவ னான சீலன் முன்வந்தான். இந்த வைபவத்தினை யொட்டித் திருமலை இந்துக் கல்லூரியில் சிறீலங்கா வின் தேசியக் கொடியை ஏற்றிவைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சீலன் தனக்கேயுரித் தான நுட்பமான அறிவைப் பயன்படுத்தி ‘பொஸ் பரஸ்’ என்னும் இரசாயனத்தை அத்தேசியக் கொடிச் சுருளில் மறைத்து வைத்தான். தேசியக் கொடி ஏற்றப்பட்டபோது அது எரிந்து சாம்ப லாகியது.

சந்தேகத்தின் பேரில் 18 வயது மாணவனான சீலன் கைது செய்யப்பட்டு சிங்களக் கூலிப்படை யால் சித்திரவதை செய்யப்பட்டான். அந்த வயதிலும் தனக்கு உடந்தையாக இருந்த எவரையும் அவன் காட்டிக் கொடுக்கவில்லை. கொள்கையிலே உறுதி கொண்டவர்களைச் சிறைச்சாலைகளும், சித்திரவதைகளும் என்ன செய்துவிட முடியும்?

தனி மனித ரீதியிலான எதிர்ப்புணர்வால் அரச யந்திரத்தை அழித்துவிட முடியாது என்ற அனுபவத் தையும் இவை சீலனுக்குப் போதித்தன. இந்த அனுபவமே சீலன் தன்னை ஒரு புரட்சிகர இயக் கத்தில் இணைத்துக் கொள்ள உந்துசக்தியாக உதவியது. ஆயுதந்தாங்கிய அடக்குமுறையை ஆயுதப் போராட்டத்தின் மூலமே தகர்க்க முடியும் என்ற நம்பிக்கையே சீலனைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலே இணைத்தது. இறுதிவரை, ‘ஆயுதப் போராட்டம் மூலம் தமிழீழம்’ என்ற ராஜ பாட்டையில் சீலன் கம்பீரமாகவே நடந்திருக் கிறான்.

இயக்கத்தில் சேர்வதற்கு முன் விட்டெறிந்து விட்டு வருவதற்கு வளமான வாழ்க்கையோ - கை நிறையக் காசு கிடைக்கும் தொழிலோ சீலனுக்கு இல்லை. ஆனால் இவனையே நம்பி அன்றாடம் சாப்பாட்டிற்கே கஷ்டப்பட்டுக் கொண் டிருக்கும் ஒரு வறிய குடும்பம் இருந்தது. வளமான வாழ்க்கையை அல்ல. வறிய குடும்பமொன்றின் எதிர் பார்க்கைகளை நிர்த்தாட்சண்யமாகத் தூக்கி வீசிவிட்டு வரும் பெரும் மனத்திடமும் இலட்சியப் பிடிப்பும் சீலனிடம் இருந்தன.

சாக்குப் படங்குகளால் மறைக்கப்பட்ட சிறிய குச்சுவீடு. வேலையோ, நிரந்தரமான வருமானமோ இல்லாத தந்தை; வீடுகளில் சமையல் வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றும் தாய்; இரண்டு அக்காள்மார்; ஒரு தங்கை. சீலன் உணவில்லாமலே வாடிய நாட்கள் ஏராளம். சிந்திக்கும் திறன் கொண்ட சீலன் தனது குடும்பம் மட்டுமல்ல, எத்த னையோ குடும்பங்கள் ஏழ்மை நிலையில் வாடுவ தைக் கண்டு நொந்திருக்கிறான்.

சீலனின் வாழ்நிலை புரட்சிகரச் சிந்தனைகளின் விளைநிலமானது. மார்க்ஸியச் சிந்தனையில் அவன் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டான். மார்க்ஸிய ஒளியில் தேசிய இனப்பிரச்சினையை அவன் தெளிவாக விளங்கிக் கொண்டிருந்தான்.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் நடக்கும் விடு தலைப் போராட்டங்களை ஆர்வத்துடன் அவ தானித்து வந்தான். A. N. C. [ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்] யின் நடவடிக்கைகளோடு தொடர்பு வைத்திருந்தான். பெண் விடுதலை பற்றிய அவனது அபிப்பிராயங்கள் சுயசிந்தனையின் பாற்பட்ட தாகவும் வியக்கத்தக்க வகையில் முற்போக்கான தாகவும் இருந்தன. இத்தகைய அரசியல் ஆற்றல் கொண்ட சீலன் இராணுவப் பிரிவுத் தலைவனாகத் திறனோடு செயற்பட்ட காலம் குறித்துத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பெருமிதம் கொள் கிறது.

குறுகிய காலத்தில் சீலன் சாதித்தவை மகத் தானவை.

1981 அக்டோபர் மாதம் பிரிகேடியர் சிறீலங்கா அரசால் பதவி உயர்வு பெற்று இராணுவக் கமாண்ட ராக நியமிக்கப்பட்டபோது தமிழீழப் போராட்ட வரலாற்றில் முதல் தடவையாக சிறீலங்கா இராணு வக் கூலிப்படைக்கு எதிரான கெரில்லா தாக்குதலுக் குத் தலைமைதாங்கி வெற்றிகரமாக நடத்தி இரண்டு சிங்கள இராணுவத்தினரைச் சுட்டு வீழ்த்திய பெருமை சீலனுக்குரியது.

(தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# செய்திக்கதிர்

### இலங்கை இந்த ஆண்டு திருப்பிக் கொடுக்க வேண்டிய வெளிநாட்டுக் கடன் 1600 கோடி ரூபாய்

இலங்கை இந்த ஆண்டில் 1600 கோடி ரூபாயை வெளிநாடுகளுக்குத் திருப்பிக்கொடுக்க வேண்டியுள்ளது. இததொகை நாட்டின் வெளிநாட்டு வருமானத்தில் 26 சதவீதமாகும். இலங்கை வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடன் தொகை 9400 கோடி ரூபாய்.

இவற்றிற்கு இந்த ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய வட்டியும், தவணைப் பணமும் 1600 கோடி ரூபாவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. 1986ல் 1270 கோடி ரூபாயை வட்டியாகவும் தவணைப் பணமாகவும் வெளிநாடுகளுக்கு இலங்கை அரசு செலுத்தியது.

### சிங்கள அரசின் எரிபொருள் தடையால் மருத்துவமனைகளில் அவசர வேலைகள் பாதிப்பு!

சிங்கள அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள எரிபொருள் தடையால் லாரிப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதனால் யாழ் போதனா மருத்துவமனை உட்பட யாழ் குடாநாட்டில் பல பகுதிகளிலுமுள்ள மருத்துவமனைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்து வகைகளையும், மருத்துவ உபகரணங்களையும் தருவிப்பதற்குப் போக்குவரத்துப் பாதிப்பு, தடையாக இருப்பதனால் மருத்துவ மனைகளில் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அதேவேளை எரிபொருள் தடையினால் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மல்லாவி, சாவகச்சேரி, பருத்தித்துறை, தெல்லிப்பளை, மந்திகை ஆகிய மருத்துவமனைகளில் உள்ள அம்புலன்ஸ் வண்டிகளும் இயங்க முடியாதுள்ளன. இதனால் இந்த மருத்துவ மனைகளிலுள்ள அவசர நோயாளிகளை உடனடி மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ் போதனா மருத்துவ மனைக்குக் கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

### எரிபொருள் தடையையடுத்து யாழ்நகர வீதிகளில் மலைபோல் குவிந்துள்ள குப்பைகளை அகற்ற ஆணையாளர் துரித முயற்சி

சிங்கள அரசினால் திடீரென ஏற்படுத்தப்பட்ட எரிபொருள் தடையினால் யாழ் நகர வீதிகளில் 300 லோட் குப்பைவரை அகற்றப்படாமல் குவிந்துள்ளது. இவற்றை அகற்றுவதில் மாநகரசபை பெரும் சிரமத்துக்குள்ளாகி உள்ளது. லாரிகளுக்குப் பதிலாக மாட்டுவண்டியைப் பயன்படுத்தினால் பெரும் கூலிச் செலவு ஏற்படும் என்பதினால், மாநகரசபை ஊழியர்கள் ரயர் சில்லுப் பூட்டிய கைவண்டிகளையே, தற்போது குப்பைகளை அகற்றுவதற்குப் பயன்படுத்துகின்றனர். எரிக்கக்கூடியவற்றை எரித்தும் புதைக்கக் கூடியவற்றைப் புதைத்தும் வீதிகளில் குப்பைகளைத் தேங்கவிடாது அகற்றுவதில் மாநகரசபை ஊழியர்கள் துரிதமாக ஈடுபட்டுள்ளனர். பொதுமக்களும் நெருக்கடி நிலையைக் கருதி, கூடியவரை வீதிகளில் குப்பைகளைப் போடுவதைத் தவிர்த்து ஒத்துழைப்பு நல்கி வருகிறார்கள்.

### ஊர்காவல்ப் படைக்கு புதிய கமாண்டர்

போலீஸ் தலைமை அலுவலக விசேட விசாரணைப் பிரிவைச் சேர்ந்த போலீஸ் சூப்பிரின்டன்ட் திரு. சுமதலியனகேயை ஊர்காவற்படை சேவையின் புதிய கமாண்டராக நியமித்த சிங்கள அரசு, ஊர்காவல் படைக்கு இதுவரை பொறுப்பாக இருந்த சிரேஷ்ட சூப்பிரின்டன்ட் திரு எச். எல். பியசேனாவை நுகேகொடைப் பிரிவுப் போலீஸ் சூப்பிரின்டன்ட் ஆக நியமித்துள்ளது.

### ஈழத் தமிழ் அகதிகளை வெளியேற்றுவதற்கு மூன்றிலிரு பகுதி சுவிஸ் மக்கள் எதிர்ப்பு!

அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட 30 இலங்கைத் தமிழர்களைக் கொழும்புக்குத் திருப்பி அனுப்பும் சுவிஸ் அரசின் தீர்மானத்தை சுவிஸ் மக்களில் மூன்றிலிரு பகுதியினர் அபிப்பிராய வாக்கெடுப்பொன்றின் மூலம் எதிர்த்துள்ளனர்.

வாராந்தர சுவிஸ் இலஸ்ரேட்டட் சஞ்சிகையும், லூசேனிலுள்ள லிங்க் நிலையமும் மேற்கொண்ட மேற்படி அபிப்பிராய வாக்கெடுப்பின்போது சுவிஸ் அரசின் தமிழ் மக்களை நாடு கடத்தும் தீர்மானத்துக்கு 35 வீதமான மக்கள் மட்டுமே ஆதரவளித்தனர்.

### மாத்தளை மாவட்டத்தில் 12 தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டன! ஆயிரக்கணக்கான தமிழ்த் தொழிலாளர்களும் உத்தியோகத்தர்களும் வேலையிழப்பு !!

தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாகக் காரணங்காட்டி மாத்தளை மாவட்டத்திலுள்ள செலகம, பன்சலதன்ன, கந்தநுவர, எல்கடுவ, ஹுன்னஸ்கிரிய, நிக்கலோயா, பிட்டகந்த, மாத்தளை வெஸ்ட் வேவல்மட, உக்குவளை ஆகிய இடங்களில் இயங்கிவந்த 12 தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன.

இதனால் இத்தொழிற்சாலைகளில் கடமையாற்றிய இரண்டாயிரத்துக்கும் அதிகமான தமிழ்த் தொழிலாளர்களும், நூற்றுக்கணக்கான அலுவலர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### இனப் பிரச்சினை காரணமாக இலங்கைக்கான நோர்வே நாட்டு உதவி குறைக்கப்பட்டது

இலங்கையில் தொடர்ந்து நீடித்துவரும் இனப் பிரச்சினை காரணமாக, இலங்கைக்கு நோர்வே அரசு வழமையாக வழங்கிவரும் உதவிகளை வெகுவாகக் குறைத்துள்ளது.

இலங்கையில் நோர்வே உதவியுடன் இடம் பெற்றுவரும் திட்டங்களை அண்மையில் நோர்வே ஆய்வுக் குழு ஒன்று பல வாரங்களாகப் பார்வை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யிட்டுச் சென்றதைத் தொடர்ந்து, இலங்கை இனப் பிரச்சினை பற்றி நோர்வே பார்லிமெண்டில் தெரிவிக்கப்பட்ட பொதுக் கருத்தும், பத்திரிகைகளும் அரசு சார்பற்ற ஸ்தாபனங்களும் தெரிவித்துள்ள கருத்துக்களுமே மேற்படி உதவிக் குறைப்புக்கான காரணங்களாகும்.

**சிங்கள இராணுவ முகாம்களை அகற்றாத வரை இலங்கைக்கு உதவி வழங்க அமெரிக்க நிறுவனம் மறுப்பு !**

மாதுறுஓயா தேசிய வனவிலங்குப் பூங்கா அமைந்துள்ள பகுதியில் நிறுவப்பட்டுள்ள இராணுவ முகாம்களை இலங்கை அரசு அகற்றும் வரை அமெரிக்க நிதி உதவியுடன் இயங்கும் மகாவலி சுற்றாடல் பாதுகாப்புத் திட்டத்துக்கு மேலும் உதவி வழங்க அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் மறுத்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை இராஜாங்க அமைச்சுக்குக் கடிதம் எழுதியுள்ள அந்நிறுவனம் இராணுவ முகாம்களை அகற்றுமாறு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

**தமிழ் அகதிகளுக்கு அனுப்பும் உணவு வாகனங்களைச் சிங்களப் படையினர் உபயோகிக்கின்றனர்**

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருக்கும் சிங்கள அதிரடிப் போலீஸ் படையினர், அகதிகளான அப்பாவிப் பொதுமக்களுக்கு உணவு கொண்டு செல்லும் லாரிகளைக் கைப்பற்றி தங்கள் சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்துகின்றனர். இதனால் மட்டக்களப்பு கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போக்குவரத்து பிரச்சனை ஏற்பட்டுள்ளது.

இவர்களது தேடுதலால் பல ஆண்கள் காடுகளில் தலைமறைவாக உணவின்றிப் பட்டினி கிடக்கின்றனர். உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளவும் இவர்கள் வருவதில்லையென்று மட்டக்களப்பு அரசாங்க அதிபர் (மாவட்ட ஆட்சித் தலைவர்) தெரிவித்தார்.

கொக்கட்டிச் சோலையிலுள்ள வயல் வெளிகளில் பல ஆண்களின் சடலங்கள் அடையாளம் காண முடியாத வகையில் உருக்குலைந்த நிலையில் காணப்படுவதாகப் புகார் வந்துள்ளது.

**தமிழ் பகுதிக்கு செல்ல மறுக்கும் பிரிகேடியர்**

தமிழ்ப் பகுதிக்குச் சென்று பணியாற்ற சிங்கள இராணுவ பிரிகேடியர் ஒருவர் மறுத்து வருகிறார். இப்படிக்கு திவயின சிங்கள ஞாயிறு இதழ் 19-1-87 அன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்தியாவில் இராணுவப் பயிற்சி பெற்றவர் இந்த பிரிகேடியர். பல முறை தமிழரின் வடபகுதி சென்று பணிபுரியும்படி மேலிடம் உத்தரவிட்டும் அவர் மறுத்து வருகிறார் என்று அச்செய்தி மேலும் தெரிவித்தது.

**காணாமற் போனவர்கள்பற்றி விளக்கம் தர முடியாத நிலையில் இலங்கை அரசு. ஐ. நா. குழு அறிக்கை!**

ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற் போனதாக அறிவிக்கப்பட்ட 326 தமிழரில் 5 பேரைத் தவிர ஏனையோர் குறித்து விளக்க முடியாத நிலையில் இலங்கை அரசு உள்ளது.

ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு அறிக்கையில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

காணாமற் போனவர்கள் பற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க என்று நியமிக்கப்பட்ட செயற்குழுவே தனது அறிக்கையில் இத்தகவலை வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கை ஐ. நா. மனித உரிமை ஆணைக் குழுவின் 43 ஆவது வருடாந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படவிருக்கிறது.

**இஸ்ரேலில் பயிற்சிபெற்ற 'சினைப்பர் எய்மன்கள்' 50 பேர் தமிழர் பகுதிக்கு வருகை!**

சினைப்பர் தாக்குதலில் விசேஷ பயிற்சி பெற்ற ''சினைப்பர் எய்மன்கள்'' எனப்படும் 50 சிப்பாய்கள் தமிழர் வசிக்கும் வடபகுதியிலுள்ள முக்கிய முகாம்களுக்கு அவசரமாகக் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இஸ்ரேலியர்களால் பயிற்றுவிக்கப்பட்ட இவர்களுக்கு குறிப்பாக குறிபார்த்துச் சுடும் சினைப்பர் தாக்குதலில் விசேஷ பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. புலிகளின் சினைப்பர் தாக்குதல் காரணமாக பல சிப்பாய்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே சிங்கள அரசும் சிப்பாய்களுக்கு இப்பயிற்சியை வெகு தீவிரமாக அளித்து வருகிறது.

**ஆயுதங்கள், வெடிமருந்துகள், கெலிகாப்டர்கள் வாங்க செலவு செய்யும் ஆயிரம் கோடி ரூபாயில் மூன்று விக்டோரியா அணைக்கட்டுத் திட்டங்கள், களுகங்கைத் திட்டங்களைப் பூர்த்தி செய்யலாம்.**

**—சிங்கள அமைச்சர்**

''இதுகாலவரை எமக்குத் தெரிந்திராத பயங்கரவாதப் பிரச்சனை இன்று உச்சநிலையையடைந்துள்ளது. இதனை எதிர்த்துப்போராட ஆயுதங்கள், வெடிமருந்துகள், கெலிகாப்டர்கள் ஆகியவற்றை வாங்க ஆயிரம் கோடி ரூபாயைச் செலவு செய்ய இன்று சிங்கள அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத எதிர்ப்புக்குச் செலவாகும் இப்பணத்தைக் கொண்டு மூன்று விக்டோரியா அணைக்கட்டுத் திட்டங்களையும் களுகங்கைத் திட்டங்களையும் இலகுவாகப் பூர்த்தி செய்ய முடியும்'' என்று அமைச்சர் திரு. காமினி திசாநாயக்கா தெரிவித்தார். வடக்கிலும், கிழக்கிலும் நிலவும் இனப் பிரச்சினை ஏற்கனவே நாட்டின் அபிவிருத்தியைப் பின் தள்ளியுள்ளது.

**இலங்கைக்கு ஆயுதங்கள் ஏற்றிவரும் கப்பலைத்தடுத்து நிறுத்துமாறு டென்மார்க் மாலுமிகள் போராட்டம் !**

சிவில் யுத்தத்தின் விளிம்பிலிருக்கும் இலங்கைக்கு ஆயுதங்களை எடுத்துச் செல்வதாகக் கூறப்படும் 'மோசோ' என்ற டென்மார்க்கின் பதிவு செய்யப்பட்ட சரக்குக் கப்பலைத் தடுத்து நிறுத்துமாறு டென்மார்க் மாலுமிகள் சங்கம் டென்மார்க் வெளிவிவகார அமைச்சர் உவே எல்லமான் ஜான்சனை வற்புறுத்தியுள்ளது.

யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் நாடுகளுக்கு ஆயுதங்கள் அனுப்பப்படுவதற்கு எதிராக அடிக்கடி குரல் எழும்பி வருபவர் அமைச்சர் ஜென்சன். எனவே, தனது சொல்லுக்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், ஆயுதக் கப்பலைத் தடுக்க வேண்டுமெனவும் மாலுமிகள் சங்கச் செயலாளர் ஹென்றிக் பெலோ கடிதம் எழுதியுள்ளார். 'மோசே' என்ற இந்தக் கப்பல் ஜெர்மன், பிரான்ஸ், மற்றும் ஸ்பெயினிலிருந்து ஆயுதங்கள் சேகரித்துக் கொண்டு இலங்கை நோக்கிப் புறப்பட்டது. ஸ்பெயின் துறைமுகமான வில்போவில் இக்கப்பல் அண்மையில் தரித்து நின்றபோது கப்பல் ஊழியர்கள் அனைவரும் அப்பாவிக் குடிமக்களுக்குத் தீங்கு விளைவிக்குமுகமாக கொழும்பு அரசுக்கு ஆயுதம் விநியோகிக்கப்படுவதை எதிர்த்தே டென்மார்க் ஊழியர்கள் வெளியேறினர். இதனால் டென்மார்க் மாலுமிகளுக்குப் பதிலாக ஸ்பானிய மாலுமிகள் வேலை செய்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழத்தில் அரச பயங்கரவாதம்

24-2-87

வவுனியா மாவட்டத்திலுள்ள பாவற்குளத்தில் புதிதாக ஒரு இராணுவ முகாம் அமைக்கப் பட்டுள்ளது. இம்முகாமுக்கு அண்மையில் சிங்கள மக்களைக் குடியேற்றும் நோக்கத்துடன் இரண்டு லாரிகளில் சிங்களவர்கள் அழைத்துவரப்பட்டு உள்ளார்கள்.

25-2-87

கடந்த மூன்று தினங்களாக நெடுங்கேணியில் சுமார் 15 ஆயிரம் இராணுவத்தினர், தேடுதல் வேட்டை எனும் பெயரில், இன அழிப்பு நடவடிக் கையில் ஈடுபட்டிருந்தனர். இவர்களால் 15 பொது மக்கள் கைது செய்யப்பட்டதுடன் வவுனியா இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர். அத்துடன் நெடுங்கேணி உட்பட ஒட்டிசுட்டான். இரணைமடு, பரந்தன்குளம் ஆகிய கிராமங்களிலும் தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதை அறிந்த பெரும்பாலான பொதுமக்கள் தத்தமது வீடுகளைவிட்டு வெளியேறி விட்டனர். அவ்விடங்களுக்குள் ஊடுருவிய இராணுவத்தினர் பல வீடுகளையும், அரிசி ஆலைகளையும். பாடசாலை களையும் உதவி அரசாங்க அதிபர் பணிமனை, உதவி அரசாங்க அதிபர் விடுதி ஆகியவற்றையும் ஆக்கிர மித்து உள்ளனர். பொதுமக்களின் வீடுகளைக் குண்டு வைத்தும் தகர்த்துள்ளனர்.

26-2-87

இன்று காங்கேசன் துறையிலும், வவுனியா மாவட்டத்திலுள்ள ஓமந்தையிலும் சிறீலங்கா அரசின் கெலிகாப்டர்கள் மக்கள் குடியிருப்புக்கள் மீது ஆகாயத்தில் பறந்தபடி துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டன. இதனால் ஓமந்தையில் பொது மக்களும், பாடசாலை மாணவ மாணவிகளும் காய மடைந்துள்ளனர்.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் மீதும் அரச படையினரால் செல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்று கிளிநொச்சி பரநதன் வீதியில் இருவர் அரச கூலிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். காரை நகர் கடற்படை முகாமிலிருந்து அடிக்கடி மோட்டார் செல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படு கிறது. இதனால் பாதுகாப்புக்கருதி வெளியேறிய மக்கள் மீண்டும் தத்தமது வசிப்பிடங்களுக்கு வர முடியாமல் தவிக்கின்றனர். அத்துடன் கடலில் மீன் பிடிக்கும் மீனவர்களும் சிறீலங்கா அரசகடற்படை யினரால் மிகக் கொடூரமாகத் தாக்கப்படுகின்றனர்.


28-2-87

இன்று காலையிலிருந்து யாழ்ப்பாணத்தில் மக்கள் குடியிருப்புக்கள் மீது மிகக்கடுமையான முறையில் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதற்குப் பக்க பலமாக கெலிகாப்டர்களும், குண்டு வீச்சு விமானங் களும் மிகப்பாரிய அளவில் குண்டுகளை வீசின.

1-3-87

இன்று திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பன்குளம் என்னும் கிராமத்தில், அகதிகள் முகாமில் தங்கியிருந்த, சுந்தரம் வைரமுத்து (வயது 49), இவரது மனைவி பரமேஸ்வரி வைரமுத்து (வயது45), குணசிங்கம் வல்லிபுரநாதன் (வயது 54), சுந்தரேசன் கைலாசநாதன் (வயது 40), உமாபதி இராஜராஜன் (வயது 42), இவரின் மனைவி செல்வலட்சுமி (வயது 39) ஆகியோர், பன்குளம் இராணுவ முகாம் உயரதி காரியின் அனுமதி பெற்று, தத்தமது வீடுகளைப் பார்த்துவரச் சென்ற சமயம் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். மேலும், இவர்கள் தமது வீடுகளுக்குச் சென்றபோது அங்கு தென் பகுதியைச் சேர்ந்த சிங்களவர்கள் அவ்வீடுகளில் குடி அமர்த்தப்பட்டிருப்பதைக் கண்டிருக்கிறார்கள். இதனால் ஆத்திரமடைந்து அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதை அறிந்து அவ்விடம் விரைந்துவந்த இராணுவத் தினர், சிங்களவர்களுக்கு ஆதரவாக ஏற்கனவே அகதிகளாக்கப்பட்டுள்ள எம் மக்களை, அவர்களின் வீடுகளுக்கு முன்பே வைத்துச் சுட்டுக் கொன்று உள்ளனர்.

இன்று யாழ்ப்பாணம் பலாலி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட சிங்களப் படையின ருக்குப் பாதுகாப்பளிப்பதற்காக வானில் பறந்து கொண்டிருந்த குண்டு வீச்சு விமானங்கள், பொது மக்கள் குடியிருப்புக்களின் மீது, குண்டுமாரி



**பருத்தித்துறைப் பகுதியில் இராணுவத்தினரின் செல் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கும் அங்காடி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொழிந்தன. அதுமட்டுமல்லாமல் தரைப்படையினரால் எமது மக்கள் மீது, பீரங்கித் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விபரீதத்தால் பொதுமக்கள் மூவர் இறந்துள்ளதுடன் பலர் படுகாயம் அடைந்துள்ளனர். இம்மிருகத்தனமான தாக்குதலின்போது, 50 இற்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன. இக்குண்டு வீச்சினால் தெல்லிப்பளை, மல்லாகம், சுன்னாகம் போன்ற கிராமங்கள் பாரிய அளவில் சேதமடைந்துள்ளன. இங்கிருந்த மக்கள் ஆயிரக்கணக்கானோர் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்துவிட்டனர்.

## 3-3-87

யாழ்ப்பாண மாவட்டம் கைதடி என்னும் இடத்திற்கு அருகே உள்ள வண்ணாத்திப்பாலம் என்ற இடத்தில், சிறீலங்கா இராணுவ கெலிகாப்டர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலுக்கு மூன்று பொதுமக்கள் இலக்கானார்கள். பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது அரச பயங்கரவாதிகளின் தாக்குதல் ஒவ்வொரு கணமும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இவ்வாறான நிகழ்ச்சிகள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அன்றாட நிகழ்ச்சிகளில் ஒன்றாகி விட்டது.

இன்று காலை திருகோணமலை மாவட்டத்திலுள்ள சாம்பல்தீவு என்னும் கிராமத்தில் அமைந்துள்ள அகதிகள் முகாம், அதிகாலை 4 மணியளவில் நூறு பேர் அடங்கிய கறுப்புச்சட்டை அணிந்த விசேஷ பயிற்சிபெற்ற இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டது. அங்கு தஞ்சம் புகுந்திருந்த சுமார் இருநூற்றம்பது பொதுமக்களையும் ஒன்று கூட்டி, அவர்களில் இளைஞர்களையும் இளம் பெண்களையும் கைது செய்தனர். இளைஞர்கள் பத்துப் பேரும், பெண்கள் நால்வரும் இராணுவமுகாமிற்குக் கொண்டு செல்லப்படும்போது, அவர்களின் பெற்றோர்கள் கதறி அழுது கெஞ்சி அவர்களை விட்டு விடும்படி கேட்டிருக்கிறார்கள். விசாரணைக்குப் பின் விடுவிக்கப்படுவார்கள் என இராணுவத்தினர்களால் பெற்றோருக்குப் பதில் கூறப்பட்டுள்ளது. ஆனால் கைது செய்யப்பட்டுக் கொண்டுபோகப் பட்டவர்கள் கூலிப்படையினரின் முகாமிலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் பாழடைந்து கிடக்கும் ஒரு கிணற்றில் இருந்து துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அரைகுறையாக எரிந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டனர். இவர்களில் நல்லராஜா செல்வராஜா (வயது 24), ஆறுமுகம் சதாசிவம் (வயது 19), இராமச்சந்திரன் சிவலிங்கம் (வயது 18), நல்லசிங்கம் சிவநேசன் (வயது 17), அன்ரன் இராஜசிங்கம் (வயது 21), மாணிக்கம் செல்லச்சாமி (வயது 29), கணபதிப்பிள்ளை செம்பமூர்த்தி (வயது 30), வீரசிங்கன் செந்தில்நாதன் (வயது24), சுந்தரலிங்கம் சிவகுமார் (வயது 20), ஞானவேலு துரைசிங்கம் ஆகியோர் இராணுவத்தினரால் துப்பாக்கியால் சுடப்பட்டு, எரித்துக் கொல்லப்பட்ட இளைஞர்களாவர்.

## 4-3-87

சர்வதேசபோர் விதிமுறைகளை மீறி, சிறீலங்கா அரசு, அதன் இராணுவத்தைக்கொண்டு வைத்தியசாலைகள், பாடசாலைகள் என்பனவற்றின் மீது குண்டுகளை வீசி, நோயாளிகளையும், மாணவர்களையும், பொதுமக்களையும் கொன்று குவித்து வருகின்றது. இவ்வாறு தெல்லிப்பளை வைத்தியசாலை மீது பீரங்கிக் குண்டுத்தாக்குதலை நடாத்திய கூலிப் படையினர், சிகிச்சை பெற்றுவந்தவர்களை விரட்டி அடித்தபின் அவற்றினை இராணுவ முகாம்களாக மாற்ற முயற்சிக்கின்றனர். ஏற்கனவே, வடக்கில் மன்னார் மாவட்டத்திலுள்ள பள்ளமடு வைத்திய சாலையையும், கிழக்கே மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மகிழடித்தீவு வைத்தியசாலையும், அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோயில் வைத்தியசாலையும் இவ்வாறு அரச கூலிப்படையினரின்முகாம்களாக மாற்றப்பட்டுள்ளது. பீரங்கி மற்றும் கனரக ஆயுதங்களின் தாக்குதல்களுக்குப் பயந்து கொண்டு, டாக்டர்களும் வைத்தியசாலையின் ஏனைய ஊழியர்களும் நோயாளிகளின் அவசர தேவையைப் பூர்த்தி செய்ய முடியாதிருக்கின்றனர். இதன் மூலம் பல அப்பாவித் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு இன அழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் தொகுதியில் அமைந்திருக்கும் சம்பூர் கிராமத்தை அண்மித்து, கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழ்ப் பொதுமக்கள் மீது மிருகத்தனமான முறையில், கடல் வழியாக வந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், சம்பூரின் அயற்கிராமமான கடற்கரையைச் சேர்ந்த குஞ்சன் என்பவர் உயிர் பிழைக்க முடியாதவாறு காயமடைந்துள்ளார். இச்செயலில் திருப்தி அடையாத அரச கூலிப்படையினர், காயங்களுடன் தத்தளித்த இன்னுமொருவரைத் தமது முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர். இவரைப் பற்றிய மேலதிக விவரங்களை அறிய முடியவில்லை.

## 5-3-87

இன்று யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள, புத்தூரில் அமைந்துள்ள சிறிவிக்னேஸ்வராக் கல்லூரிமீது, அரச பயங்கரவாதிகளான இராணுவத்தினர் கெலிகாப்டரில் வானில் பறந்த வண்ணம், அரை மணித்திலாயத்திற்கும் மேலாக தொடர்ச்சியாக இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதில் கல்லூரி மைதானத்தில் உடற் பயிற்சி செய்து கொண்டிருந்த சின்னஞ்சிறுவர்கள் பலர் காயமடைந்துள்ளனர். இவர்களில் இராசையா சிவரூபன், இராசையா சேகரன் ஆகிய சகோதரர்கள், மரணகாயம் அடைந்ததனால், ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் வயது, முறையே 9உம் 6ம் ஆகும். இச் சந்தர்ப்பத்தில் பாடசாலைக்கு அருகாமையில் உள்ள வீதியில் சென்று கொண்டிருந்த, சரஸ்வதி எனும் பெயருடைய 52 வயதுடைய பெண், பலத்த துப்பாக்கிச் சூட்டுக் காயத்திற்கு உள்ளானதை அடுத்து, அவர் புத்தூர் மிஷன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க, கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பிலிருந்து, யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த பஸ் வண்டியில், பிரயாணத்தை மேற்கொண்டிருந்த ஐந்து அப்பாவித் தமிழ் இளைஞர்கள், இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, கிழக்கு மாகாணத்தில் உள்ள புனானை இராணுவ முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இவர்களில், வீரசிங்கம் தம்பிராசா, நடராசா யோகராசா, கிருஸ்ணபிள்ளை நடராசா, கோபாலபிள்ளை ஆகிய நால்வரும் அடங்குவர். ஐந்தாமவர் பற்றியும், தற்போது இவர்கள் எந்த முகாமில் சிறைவைக்கப் பட்டுள்ளனர் என்பதுபற்றியும் மேலதிக விவரங்கள் எதுவும், கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணம், நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட செல்களினால் செல்வகுமார் (வயது 9) என்ற சிறுவன் காயமடைந்ததுடன் பெரும்பாலான வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் காயமடைந்த சிறுவர்கள் இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(2ம் பக்கத் தொடர்ச்சி)

## புலிகளின் 'சிறுவர் பூங்கா' திறப்பு விழா.

இராணுவ நடவடிக்கைகளால் மனோரீதியாகத் தமிழீழச் சிறார்கள் பாதிப்படைந்து விடாமல் விடுதலைப் புலிகள் யாழ்குடா நாட்டில் ஆங்காங்கே அமைத்துவரும் சிறுவர் பூங்கா போன்று மானிப்பாயிலும் 'தியாக சீலம்' என்ற பெயர் சூட்டப்பட்ட சிறுவர் பூங்கா ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

இப்பூங்காவை தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி திரு. கிட்டு 1-2-87 அன்று மாலை திறந்து வைத்தார்.

இத்திறப்பு விழாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

## நகர சுகாதாரத்திற்கு புலிகள் அமைத்த குப்பைத்தொட்டிகள்

யாழ்ப்பாண நகரத்தின் நெருக்கடிமிகுந்த இடங்களில் பிரதான மற்றும் குறுக்கு வீதி சந்திப்புகளில் விடுதலைப் புலிகளால் பல்லாயிரம் ரூபாய் செலவில் குப்பைத் தொட்டிகள் நிறுவப்பட்டுள்ளன.

சிறு தொட்டிகளில் குப்பை கூழங்கள் நிரம்பி வீதி ஓரங்களிலும் சிதறுகின்ற நிலமைக்கு வந்துவிட்டதால் குப்பைத் தொட்டிகளிலிருந்து துர்நாற்றம் வீசுவதுடன் கொசுபோன்ற கிருமிகள் தோன்றுமிடமாகவும் இருந்து வருகிறது.

எரிபொருள் தடையை அடுத்து யாழ்ப்பாண மாநகராட்சி லாரிகள் மாதக்கணக்கில் இப்பகுதியில் சேரும் குப்பைகளை அகற்ற வராததாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் குப்பை லாரிகளுக்கு மாற்று ஏற்பாடாக மாட்டுவண்டிகளை, குப்பைகளை அகற்றப் பயன்படுத்த ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

## தமிழீழ விடுதலைப் புலிகளில் 435 போராளிகள் இதுவரை உயிர்த்தியாகம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு இதுவரையும் உயிர்த்தியாகம் செய்த விடுதலைப் புலிகளின் தொகை 435 ஆக அதிகரித்துள்ளது. கடந்த 14ம் தேதி கைதடியில் எதிர்பாராத வகையில் நடந்த வெடிவிபத்தில் 10 விடுதலைப் புலிகள் பலியானதைத் தொடர்ந்தே இறந்தோர் தொகை 435 ஆக அதிகரித்துள்ளது.

## காற்றினால் திசைமாறிச் சென்ற தமிழக மீனவர்கள் மூவர் விடுதலைப் புலிகளால் மீட்பு!

மூன்று இந்திய மீனவர்கள் தமது மீன்பிடி இழுவைப் படகுடன் பருத்தித்துறை முனை கடற்பகுதியில் ஒதுங்கியுள்ளனர். கரையோரக் காவலில் நின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் அவர்களைக் காப்பாற்றித் தமது பாதுகாப்பில் வைத்துள்ளனர்.


ஜீ. யோசெப், ஜீ. செல்வராஜ், முருகன் ஆகிய மூவரும் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது காற்றினால் தள்ளப்பட்டு அக்கரையை அடைந்ததாகவும், கரை வெளிச்சம் தெரிந்தபொழுது தமது படகை நோக்கித் துப்பாக்கி வேட்டுகள் வந்ததாகவும், தப்பிக்க வெளிச்சத்தை நோக்கிக் கரையை நெருங்கும்போது படகு கடலிலுள்ள பாறையில் ஏறி நின்றுவிட்டதாகவும் பின் படகை நகர்த்த முயற்சித்தபோது தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மைக் காப்பாற்றிக் கரை சேர்த்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# களத்தில் உயிர்நீத்த விடுதலைப் புலிகள்



பலாலி இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்.

**தேவானந்த்**
**(வேலும் மயிலும் கேதீஸ்வரன்)**
பிறந்த தேதி: 02-01-1964
மயிலிட்டி



நாவற்குழியில் இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்.

**பூதப்பிள்ளை லவக்குமார்**
**(உத்தமன்)**
பிறந்த தேதி 01-08-1966
ஏழாலை மேற்கு ஏழாலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(1பக்கத் தொடர்ச்சி)

சுமார் 20 நிமிடத் தாக்குதலின் பின் முகாமின் கீழ்ப்பகுதிக்குள் புகுந்த விடுதலைப்புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபடியே கிரனேட்டுக்களையும் வீசித் தாக்குதலை நடத்தினர். இதில் சில இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். எஞ்சியோர் மேல்மாடியை நோக்கி ஓடினர். அவர்களைத் துரத்திச் சென்ற விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள இராணுவத்தினருக்கும் இடையே மேல்மாடியிலும் கடும் சண்டை மூண்டது. விடுதலைப்புலிகள் R.P.G ராக்கட் லோஞ்சர்களை ஏவி முகாம் கட்டிடத்தைத் தாக்கினர்.

யாழ் தொலைத்தொடர்பு நிலைய இராணுவ முகாமில் இருந்த இராணுவத்தினர், தாக்குதலை நடத்திக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். அதனால் சிறிது நேரம் கடுமையாகப் பாதிக்கப்பட்ட போதிலும் விடுதலைப் புலிகள் தற்கொலைப் படை போன்று செயற்பட்டு தாக்குதலில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டனர்.



அருணன்

இத்தாக்குதலில் பலியான, காயமடைந்த இராணுவத்தினரது ஆயுதங்களையும், பயத்தினால் இராணுவத்தினர் கைவிட்டுச்சென்ற ஆயுதங்களையும் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் தாக்குதலின் முடிவில் சரணடைந்த 5 சிங்கள இராணுவத்தினரையும், 3 சிங்களப் போலீசாரையும் கைதுசெய்து அழைத்துவந்தனர்.

இந் நேரடி மோதலில் 20 சிங்கள இராணுவத்தினர் பலியானதுடன் 12 பேர் காயமுற்றனர். புலிகளுக்குப் பயந்து ஓடிய சிங்கள இராணுவத்தினர் பண்ணை மிருக மருந்துச்சாலையில் உள்ள கிணற்றினுள் விழுந்ததால் மரணமாயினர். காயமடைந்த 12 இராணுவத்தினரும் கொழும்பு அனுராதபுரம் மருத்துவ மனைகளுக்கு கெலிகாப்டர்கள்மூலம் கொண்டு செல்லப்பட்டனர்.

இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் அருணன், ராஜ்மோகன், துரை, பண்டிதர் கில்மன் ஆகிய ஐந்துவீரர்கள் வீரமரணமடைந்தனர்.

**இத்தாக்குதல் பற்றி யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் "முரசொலி" நாளிதழில் (24-3-87) தீட்டப்பட்ட தலையங்கத்தில் ஒரு பகுதி :**

கோட்டை பொலிஸ் விடுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்குள் புகுந்து அங்கு கடமையில் நின்ற இராணுவத்தினரைச் சிறைப்பிடித்ததன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் சர்வதேச மட்டத்தில் புகழ்பெற்றுள்ளது.

மன்னாரில் கடந்த அக்டோபர் மாதம் இடம் பெற்ற மோதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்களை எடுத்ததுடன், இரண்டு சிப்பாய்களையும் சிறைப்பிடித்து வரலாற்றுச் சாதனை புரிந்தவர்கள் புலிகள்.

உள்நாட்டு யுத்தமொன்றில் கைதிகள் பரிமாற்றம் செய்து அதன் மூலமும் புலிகள் சாதனை நிகழ்த்தினர்.

வழக்கமாக இரண்டு வெளிநாடுகள் தான் கைதிகளைப் பரிமாற்றம் செய்வதுண்டு.

ஆனால் இலங்கையில் மட்டும்தான் அரசாங்கமும், விடுதலைப்போராளிகளும் கைதிகள் பரிமாற்றம் செய்யநேரிட்டது. இந்தப்பெருமை புலிகளையே சார்ந்ததாகும்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற சிப்பாய்கள் சிறைப் பிடிப்பு, **உலகப் போராட்ட வரலாற்றிலேயே இதுவரை இடம் பெற்றிராத வீரச்செயல் என்று கூறலாம்.**

**உதயன் நாளிதழில் (24-3-87) வெளி வந்த தலையங்கத்தில் ஒரு பகுதி:**

நேற்று அதிகாலை பண்ணையில் உள்ள பொலிஸ் விடுதி மீது விடுதலைப் புலிகள் வெற்றிகரமாகப் பெரும் தாக்குதலை நடத்தி உள்ளனர். சிங்கத்தின் குகைவாசலுக்கே சென்று இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது சிறீலங்கா அரச நிர்வாகத்துக்குப் பெரும் சவால் ஆகும்.

இத்தாக்குதலில் எட்டு இராணுவத்தினர் புலிகளால் உயிருடன் பிடிக்கப்பட்டனர் பலர் புலிகளின் தாக்குதலில் உயிரிழந்தனர் பெரும் தொகையான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

அடம்பனில் இரு சிப்பாய்களை உயிருடன் சிறைப்பிடித்துப் பல சிப்பாய்களைச் சுட்டுக்கொன்று காட்சிக்கு வைத்தும் வீர வரலாறு படைத்தவர்கள் புலிகள்.

நேற்றைய அதிகாலைத் தாக்குதல் மூலம் மற்றொரு வரலாறு படைத்துவிட்டனர். சமீபத்தில் நடந்த சம்பவங்களின் பின்னர் புலிகளால் தாக்குப் பிடிக்கமுடியுமா? என்றகேள்வி உருவாகிவந்த சமயம் நேற்று அதிகாலை நடந்த தாக்குதல் மக்கள் மத்தியில் புதிய தெம்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இதன் மூலம் போராளிகள் தற்பாதுகாப்பு நிலையில் இருந்து தாக்குதல் நிலைக்கு முன்னேறி உள்ளனர்.

---

**BOOK POST**

**PRINTED MATTER**

**"உறுமல்"**

**த. பெ. எண்: 928**

**அடையாறு**

**சென்னை 20**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்